IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No.383/2009

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.10 p.m.

வா.சா. 1 சாட்சி கொண்டப்பன் த.பெ.இராமசாமி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 21.08.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை குறித்து எதுவும் குறிப்பிடாமல் குறிப்பிட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையும், வரைபடமும் எனது வழக்கிற்கு விரோதமாக உள்ளதால் எனது நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

2. இந்நிர் 2ம்பிரதிவாதி ஆறுமுகம் (எ)அம்மாவாசை என்பவருக்கு 24.4.2010ல் நான் எனது வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீட்டில் 5அடி இடத்தை இடித்துத்தர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. மேற்படி பி.வா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாகவே அ.வ.எண்.499/2009ல் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கையில் வீடு பூசப்படாமல் இருந்தது என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். 05.03.2011ல் 2ம்பிரதிவாதிக்கு வழக்கறிஞர் பதில்அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி பதில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மேற்படி பி.வா.சா.ஆ.2ல் பத்தி 5ல் வடக்கே உள்ள 3அடி பாதைக்கும், வடக்கே 5அடி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்ட முயற்சிசெய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.02.2010ல் 1, 2பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. காவல்துறை சார்பு ஆய்வாளர், நாகையாபுரம் அவர்களுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளதாக எனது பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு எண்.383/2009 என்றால் சரிதான். மேற்படி வழக்கு 7.9.2009ல் தாக்கலானது என்றால் சரிதான்.

6. ஆறுமுகம் (எ) அம்மாவாசி என்மீது அ.வ.எண்.499/2009 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கலானது 14.9.2009 என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்கு தாக்கல்

செய்வதற்கான காலஇடைவெளி 7நாட்களுக்குள் 2ம்பிரதிவாதி வீடுகட்ட முடியுமா என்றால் முடியும் வீடு கட்டினார்.

7. 2ம்பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.499/2009 வழக்கில்தான் இடைநிலை மனு எண். 1234/2009 தடையுத்தரவு பெற்றுள்ளார் என்றும், எனது வழக்கில் தடையுத்தரவு (status–quo) பெறவில்லை என்றாலும் சரிதான். மேற்படி தடையுத்தரவை எனது வழக்கறிஞர் மூலம் நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி தடையுத்தரவு 2ம்பிரதிவாதி வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையில் உள்ள 3அடி பாதைக்கு மட்டும் தான் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. வழக்குச் சொத்தில் வீடு கட்டக்கூடாது என்று எனக்கு ஆதரவாக தடையுத்தரவு கிடைக்கப்பெற்றது என்று யார் கூறினார் என்றால் எனது வழக்கறிஞர் கூறினார். அ.வ.எண்.499/2009ல் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவு **பி.வா.சா.ஆ.4** ஆகும்.

9. நான் நீதிமன்ற அவமதிப்பு சம்மந்தமான மனுவை 2,4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.499/2009ல் இ.ம.எண்.463/2022ல் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவை மீறயதற்காக மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற அவமதிப்பு மனுவானது 18.07.2025ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

10. நான் எனது பட்டா, சிட்டா, அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யவில்லை

என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்து சம்மந்தமான எனது பட்டாவை தாக்கல் செய்தால்தான் வழக்குச் சொத்தின் விஸ்தீரணம் மற்றும் உரிமை தெரியவரும் என்றால் சரிதான்.

11. அடங்கல் தாக்கல் செய்திருந்தால் யார் பெயரில் தாவாச் சொத்தின் வகைப்பாடு, எவ்வளவு விஸ்தீரணம் என தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் உண்மையை நீதிமன்றத்தில் மறைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தென்பக்கம் கிழமேலாக பெரியபாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதைதான் எனது வாசல் என்றால் சரியல்ல.

12. நான் வீடாகத்தான் கிரையம் வாங்கினேன் என்றால் மண்வீடாக இருந்தபோது கிரையம் வாங்கினேன். எனது ஊரை அரசு சார்பில் அளவீடு செய்தார்களா என்றால் குறிப்பிட்ட பகுதியை மட்டும் அளவீடு செய்தார்கள். அரசு மூலமாக எனது ஊரில் அளவீடு செய்யும்போது ஆக்கிரமிப்பு பகுதியை அகற்றி குறியீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு அளவீடு செய்தபோது எனது வீடு ஆக்கிரமிப்பு இருப்பதாக சிவப்பு மையினால் குறியீடு செய்யப்பட்டது என்றால் நான் இல்லாதபோது அளவீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நான் ஆட்சேபனை செய்தேன். ஆக்கிரமிப்பு இல்லை என ஒப்புக்கொண்டார்கள்.

13. நீதிமன்றத்தில் அ.வ.எண்.383/2009ம், 499/2009 வழக்கும், இ.ம.எண்.1234/2009ல் தடையுத்தரவு இருப்பதாலும் அரசாங்கம் எனது ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்றால் சரியல்ல. ஆறுமுகம் (எ)

அம்மாவாசி வீடு தாவாச் சொத்திற்கு வடக்கேயும் அதற்கு வடக்குபக்கம் இராவுத்தர் வீடும், அதற்கு வடக்கே தெருவும் உள்ளது என்றால் சரிதான்.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

முடிவடையும் நேரம்: 12.50 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.21 10:31:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.